# மார்த்தாண்டம் கிறிஸ்தவ கல்லூரியில் ஆறு பெரும் விழா

மார்த்தாண்டம், ஏப். 24–

மார்த்தாண்டம் நேசமணி நினைவு கிறிஸ்தவ கல்லூரியில் நாளை விளையாட்டு விழா நடக்கிறது. முதல்வர் பால்ராஜ் தலைமை வகிக்கிறார். தாளாளர் வினோத் குமார் முன்னிலை வகிக்கிறார். இதில் சிறப்பு விருந்தினராக திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக விளையாட்டுத்துறை டைரக்டர் ஆறுமுகம் கலந்து கொள்கிறார்

26ம் தேதி கவுன்சிலிங் மற்றும் எம்.சி.எம்., விழா நடக்கிறது. மதுரை தமிழ்நாடு தியாலஜிக்கல் செமினாரி முதல்வர் மார்க்ரெட் கலைசெல்வி விருந்தினராக கலந்து கொள்கிறார்.



27ம் தேதி பைன் ஆர்ட்ஸ் விழா நடக்கிறது. திரைப்பட நடிகர் டில்லி கணேஷ் பங்கேற்கிறார். 28ம் தேதி கல்லூரி ஆண்டு விழா நடக்கிறது. குமரி சிஎஸ்ஐ பிஷப் செல்லையா தலைமை வகிக்கிறார். துணை முதல்வர் பிஜு வரவேற்கிறார். தமிழக சிறுபான்மையினர் அமைப்பு தலைவர் பீட்டர் அல்போன்ஸ் பேசுகிறார். முதல்வர் பால்ராஜ் அறிக்கை வாசிக்கிறார். தாளாளர் வினோத்குமார் முன்னிலை வகிக்கிறார். துணை முதல்வர் ஷீலா கிறிஸ்டி, ஜெனரல் கன்வீனர் ஸ்டாலின் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர். 29ம் தேதி பட்டமளிப்பு விழா நடக்கிறது. திருநெல்வேலி மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழக துணைவேந்தர் பிச்சுமணி பேசுகிறார். பின் மாணவ மாணவிகளுக்கு பட்டம் வழங்கப்படுகிறது. 30ம் தேதி மாணவர் கவுன்சில் விழா நடக்கிறது. டிஜிபி சைலேந்திரபாபு சிறப்பு விருந்தினராக கலந்து கொள்கிறார். ஏற்பாடுகளை கல்லூரி முதல்வர் பால்ராஜ், தாளாளர் வினோத் குமார், ஜெனரல் கன்வீனர் ஸ்டாலின் செய்து வருகின்றனர்.